செ.வெ.எண்: 42 நாள்: 19.01.2017

# பத்திரிகைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் கருவூலத்தின் வழியாக ஓய்வூதியம் பெற்று வருகின்ற ஓய்வூதியர்கள் தங்களது மாத ஓய்வூதியம் ரூ.22,000- அல்லது அதற்கு அதிகமாக ஓய்வூதியம் பெற்று வருகின்ற ஓய்வூதியர்கள் 2016-2017-ஆம் நிதியாண்டிற்கான வருமான வரி அறிக்கையினை ஒய்வூதியம் பெற்று வருகின்ற மாவட்டக்கருவூலம் மற்றும் சார்நிலைக்கருவூலங்களில் 20.02.2017 தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட ஓய்வூதியர்கள் கேட்டுக் கொள்ளளப்படுகின்றனர்.

மேலும் மார்ச் 2016 முதல் டிசம்பர் 2016 வரை உள்ள காலத்தில் ஓய்வூதியம் எவ்வளவு பெறப்பட்டது என்பதை அறிவதற்கு tn.gov.karuvoolam.in என்ற இணைய தளத்தில் ECS status of pensioners என்ற பக்கத்தில் தெரிந்து கொள்ளலாம், இதற்காக கருவூலம் சென்று ஓய்வூதிய விபரங்களை பெறவேண்டியதில்லை எனவும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை கருவூல அலுவலர் திருமதி.இரா.ரமா அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**